**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 27.03.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

1. இந்நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் Unit II 60HP மோட்டாரின் Soft starter பழுதடைந்து இயக்க இயலாத நிலையில், Unit I 60HP மோட்டாரினை தொடர்ச்சியாக இயக்க வேண்டிய நிலையில் உள்ளது. நகராட்சி பகுதிகளில் குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருவதால், ஒரு HP மோட்டாரினை கொண்டு நீரேற்றம் செய்ய இயலாது. எனவே, பழுதடைந்த Soft starter ஐ மாற்றம் வேண்டிய அவசியம் உள்ளது. 525V, 100A திறன் கொண்ட Soft starter-னை மாற்ற உத்தேச செலவீனம் ரூ.1,80,000/- (ரூ.ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.810/2020/இ1)**

**தீர்மான எண். 53 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

2. மேட்டூர் நகராட்சியில் 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலையோரம் வளர்ந்துள்ள புல் மற்றும் செடிகளை வெட்டுவதற்கு பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு புல்வெட்டும் இயந்திரங்களுக்கு பெட்ரோல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு நேரடியாக M/s மகாலட்சுமி டிரேடர்ஸ், மேட்டூர் (Indian Oil Dealers) அவர்களிடம் வாங்கிக்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.15000/-க்கும் மன்றத்தின் அனுமதி தேவைப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **இச்செலவுத்தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1232/2019/எச்1)**

**தீர்மான எண். 54 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

3, மேட்டூர் நகராட்சி பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் நடைப்பாதை Chain Link மற்றும் பெயர் பலகை பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 05.03.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s N.R & CO<br>6A8D, Rajaganapathy Nagar<br>Mettur | 0.47% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | Thiru.M.Ramasamy<br>8/37, Periya vanavasi (Po) | 2.30% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட |

| | | |
|---|---|---|
| | Mettur (TK), Salem (DT) | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.47% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s N.R & CO, Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1470/2020/இ1)**

**தீர்மான எண். 55 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

4, மேட்டூர் நகராட்சி உயிரி எரிவாயு கூட இயக்கி பராமரிக்க, இரவு காவலர் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஏற்பாடு செய்தல் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 05.03.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி(அஞ்சல்)<br>ஓமலூர் சேலம் | 0.28% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட<br>குறைவு |
| 2 | திரு.சி.பி.சாமி & கோ<br>கோனூர் (அஞ்சல்)<br>மேட்டூர் | 1.60% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1839/2019/இ1)**

**தீர்மான எண். 56 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

5, மேட்டூர் நகராட்சி சேலம் கேம்ப்பில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட நீரை குழாய் மூலம் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 05.03.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | M/s N.R& CO<br>6A8D, Rajaganapathy Nagar<br>Mettur | 0.36% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட<br>குறைவு |
| 2 | Thiru.M.Ramasamy<br>8/37, Periya vanavasi (Po)<br>Mettur (TK), Salem (DT) | 1.90% சதவிகிதம்<br>மதிப்பீட்டு விகிதத்தை விட<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.36% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s N.R & CO, Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.3464/2019 /இ1)**

**தீர்மான எண். 57 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

6. மேட்டூர் நகராட்சி பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 60HP No.II Unit ஸ்ரப்ட் ஸ்டேக்கர்( Soft Starker) பணிக்கு ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 06.03.2020ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/s S.P.P Enterprises 2/122 Salem Main Road, Sampalli (Po) Mettur (Tk) | 0.36% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s Best Engineer 160E, Workshop Cornor Mettur (TK) | 1.80% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.36% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s S.P.P. Enterprises, Mettur ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்

**(ந.க.எண்.810/2020/ இ1)**

**தீர்மான எண். 58 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

7. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –28 அவர்களின் கடித ந.க.எண்.5437/J1/2020, நாள் 09.03.2020-ந் தேதிய கடிதத்தின், கொரோனா வைரஸ் தாக்கம் சீனாவில் உள்ள வூகான் என்னும் நகரத்தில் நோய் தொற்று ஏற்பட்டு தற்பொழுது அனைத்து உலக நாடுகளில் பரவி வருகின்றது. குறிப்பாக இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் இந்நோயின் தாக்கம், பரவி தமிழகத்திலும் ஏற்பட்டு தினசரி தொடர்ந்து பாதிப்புக்குள்ளான மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்கின்றது. எனவே இந்த நோயின் தன்மையை தமிழக அரசு (கொரோனா வைரஸை) அறிவிக்கை செய்யப்பட்ட தொற்று நோய் என மாநில அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. எனவே நோய் தொற்று தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்வதால், போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பஸ்நிலையம், பயணிகள் நிழற்கூடை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனை, அரசு மற்றும் தனியார் பள்ளிகள், பூங்காக்கள், மக்கள் அதிகம் கூடுமிடங்கள், தினசரி மார்க்கெட் பகுதிகள், உழவர் சந்தைகள், வழிபாட்டு தலங்கள் போன்ற பொது இடங்களில் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை லைசால் மருந்துகளை கைத்தெளிப்பான் மூலம் தெளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை தடுக்க தேவையான கீழ்கண்ட மருந்து பொருள்களை வாங்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன் விபரம்.

1. **3000** லிட்டர் லைசால் **1** லிட்டர் ரூ.**185/–** வீதம் – ரூ. **5,55,000/–**
   **(3000** x185 = 5,55,000)
2. 1 % சோடியம் ஹைபோ குளோரைடு 1 லிட்டர் ரூ.16 வீதம் – ரூ. **1,60,000/–**
   **(10000**x **16=1,60,000)**
3. பேட்டரியால் இயங்கும் கைத்தெளிப்பான்5 எண்ணிக்கை – ரூ. **30,000/–**
   **6000** வீதம் (**5**x6000 = 30000)
4. GI பிரேம் விளம்பர தட்டிகள் 10x10 அளவு 5 எண்ணிக்கை. – ரூ. **14,000/–**
   (1 தட்டி விலை ரூ.**2800**x5 = **14000)**
5. GI பிரேம் விளம்ப தட்டிகள் 5x5 அளவு 10 எண்ணிக்கை – ரூ. **14,000/–**

(1 தட்டி விலை ரூ.1400x10 = 14000)

6. துண்டு பிரசுரங்கள் 10,000 எண்ணிக்கை – ரூ. 12,000/–

7. பாதுகாப்பு உடைகள் 1 எண்ணிக்கை ரூ.4000 வீதம் – ரூ. 40,000/–
10 எண்ணிக்கை (10x4000=40,000)

––––––––––

மொத்தம் ரூ.8,25,000/–

––––––––––

மேலே கண்ட பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. 8,25,000/– ஆகும் என்பதனையும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கொரோனா (COVID -19) வைரஸை தடுக்கவும், கட்டுப்படுத்தும் பணிக்கும், போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு பணிகளுக்கு தேவையான லைசால் 3000 லிட்டர் ரூ. ரூ.5,55,000/–க்கும், 1% சோடியம் ஹைபோ குளோரைடு 10000 லிட்டர் ரூ.1,60,000/–க்கும், பேட்டரியால் இயங்கும் கைத்தெளிப்பான்கள் 5 எண்ணம் ரூ.30,000/–க்கும், GI விளம்பர தட்டி 10X10– 5 எண்ணம் ரூ.14,000/–க்கும், GI விளம்பர தட்டி 5X5= 10 எண்ணம் ரூ.14,000/–க்கும், துண்டு பிரசுரங்கள் 10,000 எண்ணிக்கை ரூ.12,000–/–க்கும், பாதுகாப்பு உடைகள் 10 எண்ணிக்கை ரூ.40.000/– க்கும் ஆக மொத்தம் ரூ.8,25,000/–க்கு கொள்முதல் செய்யவும், இப்பணியானது அறிவிக்கப்பட்ட தொற்று நோயாக பரவி வருவதால், போர்கால அடிப்படையில் மேலே கண்ட பணிகளை உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் மேலே கண்ட பணிகளுக்கு விலைபுள்ளிகள் பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2019/எச்1)**

**தீர்மான எண். 59 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு A பிளாக் 45 நகரபுல எண்.12/6 முன்புறம் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி திரு.பொன்ராஜ் (எ) ரவிச்சந்திரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.3460/2020 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1914/2019/எப்1)**

**தீர்மான எண். 60 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

9, இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு A பிளாக் 45 நகரபுல எண்.12/6 முன்புறம் ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ளுமாறு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.1914/2019/எப்1 நாள்.20.02.2020னை பெற்று கொண்டு திரு.எம்.தங்கராஜ் என்பவர் ஆக்கிரமிப்பினை அகற்ற

கூடாது தடை உத்திரவு கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.5715 of 2020 and WMP No.6673 of 2020 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1127/2020/எப்1)**

**தீர்மான எண். 61 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

**10.** பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான லைசால் 1,000 லிட்டர் கொள்முதல் செய்ய 13.03.2020 –ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து 17.03.2020 –ந்தேதி விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன.அவற்றின் விவரம்

| வ. எண் | விலைப்புள்ளி வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | லிட்டர் 1 –க்கு விலை ரூ .பை CGST SCGT உட்பட | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.அத்தனூார் அம்மன் டிரேடர்ஸ், 1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி, நாமக்கல். | ரூ.173.60/– | குறைவு |
| 2 | M/s.ஸ்ரீ நவலடி அசோசியேட்ஸ், 82, மாவுரெட்டி, பரமத்தி. | ரூ. 175.00/– | அதிகம் |
| 3 | M/s.சாந்தா ஏஜென்ஸி, 43 கணக்கர் தெரு,சேலம். | ரூ. 184.80/– | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1, மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான லைசால் மருந்தினை கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண் 1 –ல் காணும் M/s.அத்தனுார் அம்மன் டிரேடர்ஸ், 1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி,நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை கொண்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு , பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 62 நாள். 27.03.2020**

அனுமதிக்கப்பட்டது

11, மேட்டூர் நகராட்சி புதிய தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பழுதடைந்த 6HP சர்ப் மெர்சிபுள் மோட்டாருக்கு மாற்றாக புதிய 7.5HP சர்ப் மெர்சிபுள் மோட்டார் பொருத்தல் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.03.2020ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன் பூசாரிப்பட்டி | 0.64% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட |

| | | |
|---|---|---|
| | ஓமலூர்<br>சேலம் | குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/37, பெரிய வனவாசி<br>மேட்டூர்<br>சேலம் | 1.26% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.64% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.09/2020/இ1)**

**தீர்மான எண். 63 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை- 28 அவர்களின் கடிதத்தின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் அறிவுரைகளின்படியும், கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் பரவலானது உலக நாடுகள் அனைத்திலும் பரவி அதன் தாக்கம் இந்தியாவிலும் பாதிக்கப்பட்டும், தமிழகத்திலும் நாளுக்கு நாள் நோய் தொற்று கண்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்கின்றது எனவே நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான பொது மக்கள் அதிகம் கூடுமிடங்கள், பஸ் நிலையம், தினசரி காய்கறி சந்தை, மசூதிகள், தேவாலயங்கள், அறநிலைய துறைக்கு சொந்தமான கோவில்கள், மற்றும் அரசு மற்றும் தனியார் பகுதிகளில் உள்ள அலுவலகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில், கிருமி நாசினி தெளிக்க நகராட்சிக்கு சொந்தமான ஜெட்ராடிங் இயந்திரம் (வாகனம் எண்.TN93A2362) மூலம் கிருமி நீக்கம் செய்யும் பணிக்காக வாகனத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவும், ஜெட்ராடிங் வாகனத்தை ஓட்டுவற்கு ஒட்டுநர் ஒருவருக்கு, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வருடாந்திர சந்தை நிலவரப்படி நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.576/- வீதமும், வாகனத்தில் உள்ள கம்பரசர் மற்றும் ஒஸ்களை இயக்கவும் அதற்கான இரண்டு பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்கான ஊதியம் நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.370/- வீதமும், இரண்டு நபர்களுக்கும் கணக்கீடு செய்து வழங்கவும், இப்பணியானது அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரையில், தொடர்ந்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், வாகனத்திற்கான எரிபொருளை நகராட்சியின் நிதியிலும் பணியாளர்களுக்கான ஊதியத்தை ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்காக ஆகும் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்தோ அல்லது கொரேனா தடுப்பு நடவடிக்கைக்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்தோ செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** கோவிட் - 19 கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு நகராட்சிக்கு சொந்தமான ஜெட்ராடிங் இயந்திர வாகனம் TN93A2362-ஆனது இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைமுறையில் நடைபெற்று வருவதால், இவ்வாகனமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. கோவிட் - 19 பணிக்கு நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு கிருமிநாசினி தெளிக்க பயன்படுத்த ஈடுபடுத்தி கொள்ளப்பட்டது. எனவே இந்த வாகனத்தை இயக்குவதற்கு ஒரு ஒட்டுநரும், கம்பரசர் மற்றும் ஒஸ்களை இயக்க இரண்டு பணியாளர்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே இவர்களுக்கான ஊதியம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வருடாந்திர சந்தை நிலவரப்படி ஒட்டுநர் ஒருவருக்கு நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.576/- வீதமும், மற்றும் மீதம் உள்ள இரண்டு பணியாளர்களுக்கு நாள் 1-க்கு நபர் 1-க்கு ரூ.370/- வீதமும், இரண்டு பணியாளர்களுக்கும், இந்த கோவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்று முடிவுற்று அரசிடமிருந்து மறு உத்திரவு வரும் வரையில் பணிக்கு ஈடுபடுத்தி கொள்ளவும், அதற்கான எரிபொருளை நகராட்சியின் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடனுக்குடன் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், உள்ளூர் ஒட்டுநர் மற்றும் பணியாளர்களின் தேவையினை பூர்த்தி செய்ய விலைப்புள்ளிகள் பெற்று பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232–1/2019/எச்1)**

**தீர்மான எண். 64 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**13.** கோவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் இந்நகராட்சியில் உள்ள ஜெட்ராடிங் இயந்திரம் வாகனத்தை இயக்க ஒரு ஒட்டுநரும், கூடுதலாக இரண்டு பணியாளர்களை வாகனத்திற்கு ஈடுபடுத்தி கொள்ளவும் 20.03.2020-ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் 23.03.2020-ந்தேதி வரப்பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | ஒட்டுநருக்கு நாள் 1-க்கு ஊதியம் விலைப்புள்ளி தொகை ரூ. பை | பணியாளர் ஒருவருக்கு ஒரு நாள் ஊதியம் விலைப்புள்ளி தொகை ரூ. பை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.K.கோவிந்தன்,<br>சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் &<br>மெக்கானிக்கல்<br>காண்ட்ராக்டர்,<br>பூசாரிப்பட்டி (Po),<br>காடையாம்பட்டி (TK).<br>சேலம் | ரூ.575/- | ரூ.365/- | குறைவு |
| 2 | M/s.G.P.S & Co,<br>சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் &<br>காண்ட்ராக்டர்,<br>3/352,காளியம்மன் கோவில்<br>சமீபம்,<br>பூசாரிப்பட்டி (Po),<br>காடையாம்பட்டி (TK).<br>சேலம் | ரூ.600/- | ரூ.400/- | அதிகம் |
| 3 | M/s சாமி & கோ,<br>PWD & MMC காண்ட்ராக்டர்,<br>மடத்துப்பட்டி கிழக்கு காடு,<br>கோனூார் (po),<br>மேட்டூர் அணை. | ரூ.650/- | ரூ.420/- | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், நகராட்சிக்கு சொந்தமான ஜெட்ராடிங் இயந்திரம் வாகனத்தை இயக்கவும், பராமரிக்கவும் ஒரு ஒட்டுநரும், கூடுதலாக இரண்டு பணியாளர்களும் ஈடுபடுத்தி கொள்ளவும் , அதற்கான விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண் 1-ல் காணும் திரு.K.கோவிந்தன், சிவில் எலக்ட்ரிக்கல்ஸ் & மெக்கானிக்கல் காண்ட்ராக்டர், பூசாரிப்பட்டி (Po), காடையாம்பட்டி (TK).சேலம். என்பவர் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளார். எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய விலைப்புள்ளிதாரருக்கு, பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232–1/2020/எச்1)**

**தீர்மான எண். 65 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**14**. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான 1% சோடியம் ஹைபோகுளோரைடு மருந்து மற்றும் பாதுகாக்கப்பட்ட உடை (PPE KIT) கொள்முதல் செய்ய 19.03.2020–ந் தேதி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து 23.03.2020 –ந்தேதி விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன.அவற்றின் விவரம்

| வ. எண். | விலைப்புள்ளி வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | லிட்டர் 1 –க்கு 1% சோடியம் ஹைபோகுளோரைடு மருந்தின் விலை ரூ .பை CGST SCGT உட்பட | பாதுகாக்கப்பட்டஉடை PPE KIT ஒன்றின் விலை ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ்,<br>1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி,<br>நாமக்கல். | ரூ.13.90/– | 3401.11 | குறைவு |
| 2 | M/s.ஸ்ரீ நவலடி அசோசியேட்ஸ்,<br>82, மாவுரெட்டி, பரமத்தி. | ரூ. 14.2/– | 3520.00 | அதிகம் |
| 3 | M/sஅக்ஷயா டிரேடர்ஸ்,<br>4/10,சாராயக்கடை சந்து, உறையூர்,<br>திருச்சி. | ரூ. 14.8/– | 3576.00 | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான 1% சோடியம் ஹைபோ குளோரைடு மருந்து மற்றும் பாதுகாக்கப்பட்ட உடைகள் (PPE KIT) ஆகியவைகளை கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண். 1ல் காணும் M/s. அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், 1/34 ,காளப்பநாய்க்கன்பட்டி,நாமக்கல் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை கொண்டுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு , பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 66 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**15.** பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் நோய் தொற்று எவ்வாறு உருவாகின்றன அதற்கான அறிகுறிகள் என்ன என்ன, அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது குறித்த விழிப்புணர்வு, கைபிரதிகள் அச்சடித்து பொது மக்களுக்கு விநியோகம் செய்ய 27.03.2020 –ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து 30.03.2020–ந்தேதி விலைப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன.அவற்றின் விவரம்

| வ. எண். | விலைப்புள்ளி வரப்பெற்ற அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி | 10,000 கைப்பிரதிகள் அச்சடித்து வழங்க வரப்பெற்ற விலைப்புள்ளிகள்தொகை ரூ.பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s.அசோக் பிரஸ்,<br>கம்ப்யூட்டர் ஆப்செட் & ஸ்கிரீன் பிரிண்டர்ஸ்<br>மலைவீதி, வேலாயுதம்பாளையம்,<br>கரூர். | ரூ.12,800/– | அதிகம் |
| 2 | M/s.விஜயலட்சுமி கம்ப்யூட்டர் ஆப்செட்,<br>அன்னை நகர், புகழூர்,கரூர். | ரூ.13,200/– | அதிகம் |
| 3 | M/s.பாரி அச்சகம்,<br>உரிமையாளர்.L.சுகுணா<br>சுந்தராம்பாள் நகர்,<br>வேலாயுதம்பாளையம் | ரூ. 11,500/– | குறைவு |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது சுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் இந்நோய் தொற்று எவ்வாறு உருவாகின்றன அதற்கான அறிகுறிகள் என்ன என்ன, அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது குறித்த விழிப்புணர்வு, வாசகங்கள் அடங்கிய கைபிரதிகள் அச்சடித்து விநியோகம் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரிசை எண் 3 –ல் காணும் M/S.பாரி அச்சகம், உரிமையாளர் L.,சுகுணா என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 67 நாள். 27.03.2020**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.